இசுலா இன்ஜினியரிங் வேலைகள்	C2212*29	2022-12-30	291	1	1	0	2509		11			2022-12-30	776,000	776,000	-	776,000
ஆ.னு. கட்டுமானங்கள் & பில்டர்கள்	C2212*30	2022-12-30	291	1	1	0	2509		11			2022-12-30	614,100	614,100	-	614,100
லக்ஷிகா மெட்டல் க்ரஷர்	C2212*31	2022-12-30	291	1	1	0	2509		11			2022-12-30	137,340	137,340	-	137,340
கெஸ்டெட்னர் ஆ.ப் சிலோன் பிஎல்சி	C2212*32	2022-12-30	291	1	1	0	1302		11			2022-12-30	39,043	39,043	-	39,043
கெஸ்டெட்னர் ஆ.ப் சிலோன் பிஎல்சி	C2212*33	2022-12-30	291	1	1	0	1302		11			2022-12-30	77,568	77,568	-	77,568
ஸ்ரீலங்கா டெலிகொம் பிஎல்சி	C2212*34	2022-12-30	291	1	1	0	1402		11			2022-12-30	1,315	1,315	-	1,315
மொபிடெல் பிரைவேட் லிமிடெட்	C2212*35	2022-12-30	291	1	1	0	1402		11			2022-12-30	852	852	-	852
மொத்தம்													**21,168,077**	**21,168,077**	**29,074**	**21,139,003**
முழு மொத்தம்																**21,557,921**

கொடுப்பனவு / கடப்பாடுகளின் தன்மை பின்வருமாறு இனங்காணப்பட வேண்டும்.

1. அமைச்சு / அரசாங்கத் திணைக்களம்
2. அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச் சட்ட நிறுவனங்கள்
3. தனியார் துறை

பொறுப்புக்கள் என்பது குறித்த நிதியாண்டினுள் பொருட்கள் சேவைகள் மற்றும் நிருமாண ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் சேவைகள் கிடைக்கப் பெற்றுள்ள போதிலும் நிதியாண்டினுள் அதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு கொடுப்பனவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்களைக் குறிக்கும்.

கடப்பாடுகள் என்பது குறித்த நிதியாண்டிலே பொருட்கள் சேவைகள் மற்றும் நிருமாண ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய குறித்த சொத்துக்கள் அல்லது சேவைகள் நிருமாணத்திற்கு கிடைக்கப்பெறாத எனினும் குறித்த பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் வெளித் தரப்பினருடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் அல்லது எழுத்து மூல இணக்கப்பாடுகளைக் குறிக்கும்.

பிரதான கணக்காளர்

திகதி :

பொறுப்புக்கள் பற்றிய கூற்றுக்கள் - (i)

பின்னிணைப்பு- (iv)

நி.ஒ. 94 (2) மற்றும் (3) பிரகாரம்

செலவினத் தலைப்பு இல : 291 திணைக்களத்தின் பெயர் : கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் : 01 செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்

தனியாள்/நிறுவனத்தின் பெயர்	முறி பற்றிய விபரம்	கருத்திட்டம்	உப கருத்திட்டம்	செலவு விடயக் குறியீடு	நிதியிடல் குறியீடு	நி.ஒ. 94(2) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக எடுக்கக்கூடிய அதிகபட்ச கடப்பாடுகளின் எல்லை (ரூபா)	நி.ஒ. 94(3) இற்கு அமைவாக மொத்தச் செலவின மதிப்பீடு (ரூபா)	கடப்பாடு மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி (ரூபா)
1. அமைச்சு / அரசாங்கத் திணைக்களம் செயலாளர் மீன்பிடி அமைச்சு	அலுவலக சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு	1	0	1409	11			5,704,454
மொத்தம்								**5,704,454**
முழு மொத்தம்								**5,704,454**

பிரதான கணக்காளர்

திகதி :

2015/10/23 ஆம் திகதி வெளியிடப்பட்ட திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கை ,லக்கம் 2015/03 இல் (1) ஆவது பந்தியின் அறிவுரைகளுக்கு இணங்க ஆரம்பிக்கப்பட்ட புதிய வங்கிக் கணக்ககள் பற்றிய 2022.12.31ஆம் திகதிக்குரிய நிலைமை பற்றிய அறிக்கை

பின்னிணைப்பு-(viii)

செலவினத் தலைப்பு இல : 291

திணைக்களத்தின் பெயர் : கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்

தொடர் இல.	வங்கியின் பெயர்	கணக்கு இலக்கம்	2022.12.31 ஆம் திகதியன்று வங்கிக் கூற்றின் பிரகாரம் மீதி	2022.12.31 ஆம் திகதியன்று காசேட்டின் பிரகாரம் மீதி	2022.12.31ஆம் திகதிக்கு வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத மொத்தக் காசோலைகள் (6 மாதங்களுக்கு மேலாக இருப்பின்)	இறுதியாக வங்கி சரிசெய்தல் தயாரிக்கப்பட்டுள்ள மாதம்
01	இலங்கை வங்கி தப்ரோபேன் கிளை	0007042641	12,785,349	-	-	டிசம்பர் 2022
02	இலங்கை வங்கி தப்ரோபேன் கிளை	0007040117		-	-	

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

பிரதான கணக்காளர்
திகதி :

3.6 வருமானச் சேகரிப்பின் செயலாற்றுகை

ரூ. 000

வருமானக் குறியீடு	வருமானக் கோவையின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூ.)	இறுதி வருமான மதிப்பீட்டின் % ஆக
2003-02-99	நிர்வாகக் கட்டணங்கள் மற்றும் கட்டணங்கள்	42,000	42,000	45,800	109.05
2002-02-99	வட்டி - பிற	1,600	1,200	1,480	123.33

3.7 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவதன் செயலாற்றுகை

ரூ. 000

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள்		உண்மைச் செலவினம்	பயன்படுத்திய ஒதுக்கீடு நிறைவு செய்யப்பட்ட இறுதி ஒதுக்கீட்டு அளவின் % ஆக
	ஆரம்ப	இறுதி		
மீண்டெழும்	336,660	336,660	322,899	95.91
மூலதன	191,085	191,085	165,722	86.73

3.8 ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களிடமிருந்து ஒதுக்கீடுகள் கிடைக்கவில்லை

ஏற்புடையதல்ல.

3.9 நிதியல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை

ரூ. 000

சொத்துக் குறியீடு	குறியீட்டு விபரம்	கணக்கெடுப்புச் சபை அறிக்கைக்கு ஏற்ப மீதி 31/12/2019	2019/12/31 திகதியில் நிதி நிலைமை அறிக்கைக்கு ஏற்ப மீதி	எதிர்காலத்தில் கணக்கீட்டுக்கு உட்படுத்தவுள்ள	முன்னேற்றத்தை % ஆக அறிக்கையிடல்
9151	கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள்	-	175,898	-	-
9152	இயந்திர உபகரணங்கள்	-	319,687	-	-
9153	நிலங்கள்	-	102,688	-	-
9154	மற்றவை	-	14,528	-	-

3.10 கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புரை - 2021

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

எப்டபிள்யூஎல்/டீ/சீசீ&சீஆர்எம்டீ/எப்ஏ/01/2022 2023 மே ஆம் திகதி

பணிப்பாளர் நாயகம்

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம்

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்தின் 2022 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் பொழிப்பு அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்தின் 2022 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படும் மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கை

சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2022 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் நிதிப் பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஒத்திசையும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க இயலுமான வகையில் தேவையான உள்ளக நிருவாகத்தினைத் தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்தம் மற்றும் காலத்திற்கு ஏற்ற வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் என்பன பேணி வரப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்காக விளைதிறனுள்ள உள்ளக நிருவாக முறைமை ஒன்றைத் தயாரித்து பேணி வருவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் மேற்படி முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு ஒன்றினை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது நிதிக் கூற்றுக்களில், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவுகள் சார்ந்த வகையிலான பிறழ் கூற்றுக்கள் இல்லை என்பது தொடர்பாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றினை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கையினை வழங்குதல் என்பன எனது நோக்கமாகும். நியாயமான வகையில் உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாகும் எனினும், இலங்கையின் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது இது எப்பொழுதும் அளவுகள் சார்ந்த தவறான கூற்றுக்கள் அற்றதாக உள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதாக இல்லாமல் இருக்கும். மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தினை ஏற்படுத்துவதனால் அளவுகள் சார்ந்த தவறான கூற்றுக்கள் ஏற்பட முடியும் என்பதுடன், மேற்படி நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரிசீலிப்பவர்களினால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்களில் அது பாதிப்புச் செலுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில் சார் நியாயத் தீர்ப்பு மற்றும் தொழில்சார் ஐயப்பாட்டுடன் இலங்கையின் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் ஆபத்துக்களை அடையாளம் காணும்போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறை ஒழுங்கு விதிகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துக்களை முன்வைத்தல்

1.6.1 நிதிப் பாய்ச்சல் கூற்று

(அ) நிதிப் பாய்ச்சல் கூற்றில் நடைமுறைச் செயற்பாடுகளில் நிதியுதவிகள் மற்றும் மாற்றல்கள் என்பவற்றின் கீழ் சுட்டிக் காட்டப்பட வேண்டிய ரூ. 3,111,073 தொகை ஆளுக்குரிய வேதனாதிகளின் கீழ் குறிப்பிடப்பட்டு இருந்தது.

(ஆ) 2022 டிசம்பர் மாதத்தில் ரூ. 555,000 தொகைக்கு விற்பனை செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை முதலீட்டுச் செயற்பாடுகளில் நிதி உட்பாய்ச்சல் என்ற வகையில் குறிப்பிடுவதற்குப் பதிலாக ஏனைய வருமானத் தலைப்புக்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானங்கள் என்ற வகையில் நடைமுறைச் செயற்பாடுகளின் கீழ் குறிப்பிடப்பட்டு இருந்தது.

1.6.2 கட்டுநிதி இணக்கக் கூற்று

திறைசேரியின் கணினி அச்சுப் பதிப்புக்களுக்கு அமைய "ஏனைய தலைப்புக்களுக்காக அறிக்கையிடும் தாபனங்களினால் ஏற்கப்பட்ட செலவுகள்" ரூ. 10,423,210 தொகை ஆகக் காணப்பட்ட போதிலும், அதனை ரூ. 9,370,493 என்ற வகையில் கட்டுநிதிக் கணக்கு இணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

1.6.3 நிதி அல்லாத சொத்துக்கள்

(அ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் ரூ. 42,007,000 தொகைக்கு மதிப்பீடு செய்து காட்டப்பட்டு இருந்த மொரட்டுவை, மாத்தறை மற்றும் கொடவாய ஆகிய 03 காணிகளின் உரித்து 2022 டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும் போதும் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்று இருக்கவில்லை.

(ஆ) சிலாபம் பிரதேச செயலகம், பிரதேச செயலகத்திற்கு உரித்தான கட்டிடம் ஒன்றில் பேணி வரப்பட்ட போதிலும், அதனை ரூ. 2,800,000 தொகைக்கு மதிப்பீடு செய்து நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டு இருந்தது.

(இ) 2014 யூன் 20 ஆம் திகதி குச்சவெளி பிரதேச செயலாளரினால் திணைக்களத்திற்கு உரித்து ஒப்படைக்கப்பட்டு உள்ள திருகோணமலை பிரதேச செயலகம் பேணி வரப்படும் காணியினை ரூ. 12,400,000 தொகைக்கும், கட்டிடத்தை ரூ. 44,000,000

தவறாக முன்வைத்தல் காரணமாக ஏற்படும் அளவுகள் சார் பொய்யான கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்திலும் பார்க்க மோசடிகளினால் ஏற்படும் தாக்கம் ஆதிக்கம் கூடியது என்பதுடன், ஏமாற்றுக் கூட்டுச்சக்தி, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், உள்நோக்குடன் புறக்கணித்தல், தவறாக முன்வைத்தல் அல்லது உள்ளக நிர்வாகங்களைப் புறக்கணித்தல் என்பன மோசடிகள் ஏற்படக் காரணங்களாக அமையும்.

- உள்ளக நிருவாகத்தின் விளைதிறன் தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாவிடினும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக நிருவாகம் தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உட்பட நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது மதிப்பீடு செய்யப்பட்டது.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக நிருவாகப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கின்றேன்.

1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள விடயங்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டு உள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திசைகின்றது.

(அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டு உள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய இந்த அறிக்கையில் கடந்த வருடம் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு உள்ளன.

தொகைக்கும் மதிப்பீடு செய்து இருந்த போதிலும், அவை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) 1999 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்து ரூ. 9,800,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டு இருந்த இரண்டு மோட்டார் வாகனங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் நிறுவனத்தின் மூலம் 2022 ஆம் ஆண்டில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்கள் உட்பட திணைக்களத்திற்கு உரித்தான 08 மோட்டார் சைக்கிள்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்கில் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(உ) பெறுகைகள் குழுவின் தீர்மானம் ஒன்றிற்கு அமைய 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ரூ. 2,192,000 தொகைக்கு விற்பனை செய்யப்பட்ட 07 வாகனங்கள், வாகனங்களை விற்பனை செய்யும் சந்தர்ப்பம் ஆகும் போதும் நிதி அல்லாத சொத்துக்கள் என்ற வகையில் கணக்கில் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை.

1.6.4 வைப்புக் கணக்குகளின் மீதிகள்

கரையோரப் பாதுகாப்பு நன்கொடை நிதியத்திற்கு நீதிமன்றத்தின் மூலம் அறவிடப்பட்டு அனுப்பி வைக்கப்படும் தண்டப் பணங்களில் இருந்து, மேற்படி நிதியத்தில் தேக்கி வைத்துக் கொள்ள வேண்டிய ரூ. 482,015 தொகை திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டு இருந்தது.

1.6.5 ஆவணங்கள் மற்றும் ஏடுகளைப் பேணி வந்திருக்காமை

திணைக்களத்தினால் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள ஆவணங்கள் பேணி வரப்பட்டு இருக்கவில்லை என்பதுடன், சில ஆவணங்கள் முறையாகவும் மற்றும் இற்றைப்படுத்தப்பட்டும் பேணி வந்திருக்கவில்லை என்பது மாதிரிக் கணக்காய்வுப் பரீட்சிப்புக்களின் போது அவதானிக்கப்பட்டது.

	ஆவண வகை	உரிய ஒழுங்குவிதி	அவதானிப்புக்கள்
(அ)	வாகனங்கள் பட்டியல்படுத்தப்பட்ட ஆவணம்	நிதி ஒழுங்குவிதி 1647 (உ)	பேணி வந்திருக்கவில்லை.
(ஆ)	முற்பண ஆவணம்	நிதி ஒழுங்குவிதி 371	முறையாகவும் மற்றும் இற்றைப்படுத்தப்பட்டும் பேணி வந்திருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 வருமான முகாமைத்துவம்

லங்கா மினரல் ஸேண்ட் லிமிடட் தாபனத்திற்கு 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 செப்தெம்பர் வரையான காலப்பகுதிக்குள் வழங்கப்பட்ட 04 அனுமதிப்பத்திரங்களுக்கு மற்றும் 2020 செப்தெம்பர் 07 ஆம் திகதி தொடக்கம் 2021 செப்தெம்பர் 06 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்திற்கு உரிய வகையில் மேற்படி தாபனத்தினால் அனுமதிக்கப்பட்ட மணல் கியூப்கள் அளவினைத் தாண்டி அதிகமாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் மூலம் அறவிடப்பட வேண்டிய முறையே ரூ. 72,895,000 தொகை மற்றும் ரூ. 1,688,515 தொகைக் கட்டணத்தினை அறவிட்டுக் கொள்வதற்கு இயலாமல் போயிருந்தது.

2.2 செலவின முகாமைத்துவம்

நிதி ஒழுங்குவிதி 50 (ii) இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடுகள் இயன்றளவு முழுமையாகவும் மற்றும் சரியான வகையிலும் தயாரிக்கப்பட்டு உள்ளது என்பது தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்புக் கூறுதல் வேண்டும் எனினும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நி.ஒ. 66 மற்றும் நி.ஒ. 69 மாற்றல்களின் மூலம் 07 செலவு விடயங்களின் வரவு செலவு மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீடு நூற்றிற்கு 23 தொடக்கம் நூற்றிற்கு 300 வரையான வீச்சு ஒன்றில் மாற்றம் செய்யப்பட்டு இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு முன்வருதல்

(அ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் ரூ. 5,704,453 தொகை ஆகிய பொறுப்புக்களில் 2019 ஆம் ஆண்டிற்காக கடற்றொழிலியல் அமைச்சிற்கு செலுத்தப்பட வேண்டிய ரூ. 2,875,316 தொகை பாதுகாப்புச் சேவைத் தொகை மற்றும் ரூ. 455,237 தொகை சேவைச் செலவு என்பன காணப்படுவது அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக் கூற்றின் குறிப்பு (iii) மற்றும் (iv) ஆகிய கூற்றுக்களில் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலவிய சகல பொறுப்புக்களும் தழுவப்படுதல் வேண்டும் எனினும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கு உரிய வகையில் ரூ. 266,233 தொகைப் பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்காக பயனுறுதி உள்ள உள்ளக நிருவாகக் கட்டமைப்பு ஒன்று தயாரிக்கப்பட்டு பேணி வரப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன், மேற்படி கட்டமைப்பின் பயனுறுதி தொடர்பில் அவ்வப்போது மீளாய்வினை மேற்கொண்டு அதற்கு அமைய கட்டமைப்பினை பயனுறுதி உள்ள வகையில் பேணிச் செல்வதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும், மேற்படி மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதி ஒன்றினை கணக்காய்வாளர் நாயகம் அவர்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும் எனினும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாக கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்கி ஒழுகாமை

சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான முன்னளிப்பு	இணங்கி ஒழுகாமை
(அ) 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திருத்தச் சட்டத்தின் 31 (4) ஆம் பிரிவு	2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அனுமதியின்றிய நிர்மாணிப்புக்களை அகற்றுவதற்காக திணைக்களத்தினால் செலவிடப்பட்டு இருந்த ரூ. 3,410,551 தொகையில் ரூ. 2,892,165 தொகை உரிய தரப்பினர்களிடம் இருந்து அறவிடப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் மேற்படி பெறுமதி செலவழிக்கப்பட்ட தொகையின் நூற்றிற்கு 84.8 ஆகக் காணப்பட்டது.
(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் கோவையின் நிதி ஒழுங்குவிதி 880	பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு அமைய உரிய உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணைத் தொகையினைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(இ)	2016 டிசம்பர் 29 ஆம் திகதிய மற்றும் 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபத்தின் 3.1 ஆம் பந்தி	ஒவ்வொரு எரிபொருள் பரீட்சிப்பும் 12 மாத கால வரையறைக்குப் பின்னர் அல்லது 25,000 கி.மீ. அளவு தூரம் ஓடியதன் பின்னர் அல்லது என்ஜினுடன் தொடர்பான பிரதான பழுதுபார்த்தல் ஒன்றிற்குப் பின்னர் எனும் விடயங்களுள் முதலாவதாக வரும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் தகனம் தொடர்பாக பரீட்சிப்பு ஒன்றினை மேற்கொள்ள வேண்டும் எனினும், தாபனத்தின் 17 வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

2. செயலாற்றுகை மீளாய்வு

3.1 செயலாற்றுகை

3.1.1 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை

2022 ஆம் ஆண்டின் செயலாற்றுகைத் திட்டத்திற்கு அமைய ஆண்டிற்குள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டு இருந்த நிர்மாணிப்புப் பணிகள் 04 இற்கு உரிய பௌதீகச் செயலாற்றுகை நூற்றிற்கு 5 இற்கும் நூற்றிற்கு 35 இற்கும் இடையிலான வீச்சு அளவு ஒன்றினைக் கொண்டிருத்தமை காரணமாக மேற்படி கருத்திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்படும் பயன் தொகைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இயலாமல் சென்று இருந்தது.

3.1. எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தினைப் பெற்றுக் கொள்ளாமை

அ) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் உடைத்து அகற்றுவதற்கான கட்டளை வழங்கப்பட்ட அத்துமீறிய 2,228 நிர்மாணிப்புக்களுள் அத்துமீறிய 2,069 நிர்மாணிப்புக்களை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் 13 மாவட்டங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு இருந்ததாக அடையாளம் காணப்பட்ட மொத்த அத்துமீறிய நிர்மாணிப்புக்கள் 861 இல் அத்துமீறிய நிர்மாணிப்புக்கள் 255 இற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

3.2 பெறுகைகள்

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் வெளியிடப்பட்ட 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதிய மற்றும் பிஎப்டீ 05/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அரச நிறுவனங்களினால் e-GP கட்டமைப்பின் ஊடாக இலத்திரனியல் பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக அதில் குறிப்பிடப்பட்டு உள்ள மாதிரிகளின் பிரகாரம் பெறுகை ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து மேற்படி தகவல்களுடன் தாபனத்தினால் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்பட்ட பெறுகைப் பணிகள் தொடர்பான விபரங்கள் மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் என்பவற்றினைத் தயாரித்து 2018 நவெம்பர் மாதத்தில் அரச நிதித் திணைக்களத்திடம் முன்வைக்கப்பட வேண்டி இருப்பினும், திணைக்களத்தினால் அதற்கு உரிய வகையில் எதுவித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

3.3 சொத்து முகாமைத்துவம்

(அ) மின் கட்டமைப்பில் நிலவும் குறைபாடு ஒன்று காரணமாக 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் ஒரு வருட காலத்திற்கும் மேலான காலம் ஓட்டம் எதுவுமின்றி ஒரே இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ள வாகனம் ஒன்றினை பழுதுபார்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையின் காரணமாகவும், பெறுமதி ரூ. 11.9 மில்லியன் என்ற வகையில் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு இருந்த Volvo Excavator வாகனம் ஒன்று பல வருட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்காமையின் காரணமாகவும் பழுதடைந்த நிலைக்கு உட்பட்டு துருப்பிடித்துச் செல்வது அவதானிக்கப்பட்டது.

(ஆ) பெறுமதி ரூ. 5,800,000 தொகை என்ற வகையில் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு உள்ள PD-1046 ஆம் இலக்க TOYOTA HILUX டபல் கெப் வண்டி 2021 நவெம்பர் 16 ஆம் திகதி கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டு இருந்த போதிலும் அதன் உரித்தினை ஒப்படைப்பதற்கு அல்லது மேற்படி வாகனத்தை திணைக்களத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

3.4 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

2022 யூன் 23 ஆம் திகதி Hyundai Excavator இயந்திரத்திற்கு ஏற்பட்டு உள்ள ரூ.54,320 தொகை நட்டம் தொடர்பில் விசாரணை நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து புத்தகத்தில் இருந்து வெட்டி நீக்குவதற்கு அல்லது அறிவிட்டுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

4. நிலையான அபிவிருத்தி

4.1 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதன் முன்னேற்றம்

காலநிலை சார்ந்த கடற்கரையோர அனர்த்தங்களைத் தடுத்தல் மற்றும் கரையோரச் சூழல் தொகுதியினை நிலையான வகையில் பாதுகாத்தல் எனும் நிலையான அபிவிருத்தி இலக்குகளின் கீழ் அடையாளம் காணப்பட்ட செயற்கை மணல் ஊட்டக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பணிகள் செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

5. மனித வள முகாமைத்துவம்

5.1 இணைக்கப்பட்டு உள்ள பதவியணி, உண்மையான பதவியணி

2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று திணைக்களத்தின் 541 தொகை ஆகிய அனுமதிக்கப்பட்ட பதவியணியில் உண்மையான பதவியணி 417 ஆகக் காணப்பட்டமையினால் 124 பதவிகள் வெற்றிடங்களாகக் காணப்பட்டன. மேற்படி வெற்றிடங்களுக்கு இடையில் சிரேஷ்ட மட்டத்தில் உள்ள 15 பதவிகளும், மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை மட்டங்களில் உள்ள 43 பதவிகளும், ஆரம்ப நிலை மட்டத்திலுள்ள 66 பதவிகளும், உண்மையான எண்ணிக்கை 114 ஆகக் காணப்பட்டமையினால் 24 மிகையும் காணப்பட்டது. அதற்கு அமைய உண்மையான வகையில் நிலவும் பதவிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கடமை நடவடிக்கைகளை பேணி வருவதற்கான ஆற்றல் தொடர்பில் மீளாய்வு செய்து தேவைப்பாட்டிற்கு அமைய திருத்தங்களை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

.

ஆர்.எம்.எம்.எஸ். பெரேரா
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகம் சார்பில்

அத்தியாயம் 04

செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

குறிப்பீட்டுச் சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக உண்மையான வெளியீடு		
	100% -90%	75% - 89%	50% -74%
வினைத்திறனாக பாதுகாக்கப்பட்ட கடற்கரையின் நீளம		76%	
ஊட்டமளிக்கப்பட்ட மணல் கொண்ட வினைத்திறனான கரையோரங்களின் நீளம்			0%
தூய்மையான கடற்கரையின் நீளம்	100%		
பாதுகாக்கப்பட்ட உணர்திறன் பகுதி			0%
சதுப்பு நிலபடுக்கையின் மறுசீரமைப்பு		75%	
8.0 க்கு மேற்பட்ட, வருடாந்த சராசரி கரையோர நீரின் கார மட்டத்தின் பரிசோதனை	100%		0%
வுழங்கப்பட்ட இலத்திரனியல் அனுமதிப்பத்திரம்		82%	
சுற்றுச்சூழல் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்	100%		

அத்தியாயம் 05

முன்னெடுத்துச் செல்லக்கூடிய நிலைபேறான இலக்குகளின் முன்னேற்ற அறிக்கை

5.1 அடையாளம் காணப்பட்ட சம்பந்தப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு (SDG)

நிறுவன நோக்கத்துக்கு அமைய இலக்கு	நடவடிக்கை	வெற்றி பற்றிய குறிகாட்டி	2022 இலக்கு	2022 முன்னேற்றம்	% 0 - 49	% 50 - 74	% 75 - 100	SDG கட்டமைப்புக்குள் வழங்கப்பட்டுள்ள தொடர்பான கொள்கையின் இலக்கு
இலக்கு - 13 காலநிலை மாற்றம் மற்றும் அதன் விளைவுகளுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுத்தல்								
1. காலநிலை தொடர்பான கடலோர பேரழிவுகளின் பாதகமான விளைவகளைத் தடுத்தல் மற்றும் கணிசமாக குறைத்தல்.	1.1. கரையோர பாதுகாப்பு கட்டமைப்பு நிர்மாணம்	a. பயனுள்ள பாதுகாப்பான கரையோர நீளம்	4500m	3430m			76	13.1 சகல நாடுகளின் காலநிலை தொடர்பான ஆபத்துக்கள் மற்றும் இயற்கை பேரழிவுகளை தாங்கும் திறன் மற்றும் மாற்றியமைக்கும் திறனை வலுப்படுத்தல்.
	1.2. செயற்கை மணல் ஊட்டல் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தல்.	b. செயற்கை மணல் ஊட்டம் கடற்கரை நீளத்தை உறுதிப்படுத்தியது.	0	0	0			
	1.3. பாதகமான நிலைக்கு உள்ளான பிரதேசங்களை இனம் கண்டு முகாமைத்துவம் செய்தல்	c. மணல் திட்டுக்கள், சதுப்பு நிலங்கள் மற்றும் உப்பு சதுப்பு நிலங்கள் மற்றும் உணர்திறன் சுற்றுச் சூழல் அமைப்புகளை பாதுகாத்தல்.	1000m2	750m2			75	
இலக்கு - 14 நிலைபேறான அபிவிருத்திக்கு சமுத்திரம் மற்றும் சமுத்திர வளங்களை பாதுகாத்தல் மற்றும் உறுதியான பயன்பாடு								
2. கடல் மாசடைதலைத் தடுத்தல் மற்றும் குறைத்தல் மற்றும் பல்வேறு இடங்களில் நீரின் தர அளவுருக்கள் (ph) குறித்த தரவுகளின் அளவீடு மற்றும் பரிமாற்றம்.	2.1. கரையோரம் சுத்தம் செய்யும் வேலைத் திட்டத்தை செயற்படுத்தல்.	d. சுத்தம் செய்யப்பட்ட ஒட்டுமொத்த கடற்கரை நீளம்.	2000m	4000m			100	14.1 2025ஆம் ஆண்டின்போது சமுத்திர குப்பைகள் மற்றும் ஊட்டச்சத்து மாசுபாடு உட்பட, முக்கியமாக நில அடிப்படையிலான செயற்பாடுகளிலிருந்து, அனைத்து வகையான கடல் மாசுபாடுகளையும் தடுத்தல் மற்றும் குறிப்பிடத்தளவு குறைவு.

நிறுவன நோக்கத்துக்கு அமைய இலக்கு	நடவடிக்கை	வெற்றி பற்றிய குறிகாட்டி	2022 இலக்கு	2022 முன்னேற்றம்	% 0 - 49	% 50 - 74	% 75 - 100	SDG கட்டமைப்புக்குள் வழங்கப்பட்டுள்ள தொடர்பான கொள்கையின் இலக்கு
	2.2. கரையோர நீரின் தர அளவுருக்களின் அளவீடு.	e. 2026 வரை சாதாரண வருடாந்த கரையோர நீரின் pH அளவு 8.0 க்கு மேல் உள்ளதா என்பதை பரிசீலனை செய்தல்.	04 அளவுருக்கள் மற்றும் தரவு பரிமாற்றம்	04 இடங்களில் அளவுருக்கள் அளவிடல் மற்றும் தரவு மாற்றம் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.			100	14.3 சகல மட்டங்களிலும் மேம்படுத்தப்பட்ட விஞ்ஞான ரீதியிலான ஒத்துழைப்பு உட்பட கடல் அமிலத் தன்மையின் விளைவுகளைக் குறைத்தல் மற்றும் அவற்றின் தீர்வுகளைக் கண்டறிதல்.
3. ஆரோக்கிய வளம் மற்றும் உற்பத்தி திறனை பெற்றுக் கொள்வதற்கு அவற்றை புனரமைப்பு செய்வது உட்பட குறிப்பிடத்தக்க மனித தாக்கங்களைத் தடுப்பது மற்றும் கரையோர சூழல் தொகுதி நிலைபேறாக அபிவிருத்தி செய்தல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் பாதுகாத்தல்.	3.1. சதுப்பு நிலப் பகுதிகளின் புனரமைப்பு	f. செய்கையிடப்பட்ட அளவு	150 ஹெக்டயர்	0	0			14.5 2025ம் ஆண்டளவில் கரையோர இடிபாடுகள் மற்றும் மாசுபடல் உட்பட நில அடிப்படையான நடவடிக்கைகளில் இருந்து கரையோர மாசுப்படுதலை குறைத்தல் மற்றும் தடுத்தல்

5.2 நிலைபேறான அபிவிருத்தியின் நோக்குகளில் வெற்றி மற்றும் சவால்களை சுருக்கமாக குறிப்பிடவும்.

அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இயன்றவரை அடைவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் இவற்றில் சில இலக்குகளை தரப்பனரான தரப்பினருடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 06

மனித வள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	வெற்றிடங்களின் எண்ணிக்கை
சிரேஷ்ட	43	28	15
மூன்றாம் நிலை	4	0	4
இரண்டாம் நிலை	322	284	38
ஆரம்ப நிலை	172	109	63

06.2 ** பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக்

01) ஊழியர்களின் குறைவு நிலை காணப்படும் போது நிறுவனத்தினுடைய செயற்பாடு எதிர்மறையாக இருக்கும் . 02) இலக்குகளினுடைய வினைத்திறனில் குறைவு ஏற்படுவதனால் ஒரே விதமான விளைவுகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

6.3 மனித வள அபிவிருத்தி

நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித்திட்டக் காலம்	மொத்த முதலீடு (ரூ. 1000)		நிகழ்ச்சித்திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு/ வெளிநாட்டு)	பெற்றுக்கொண்ட அறிவு *
			உள்நாட்டு	வெளிநாட்டு		
இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்களுக்கான தமிழ் பயிற்சி பாடத்திட்டம்	30	150 மணி நேரம்	115.3		உள்ளூர்	தமிழ்
கனிஸ்ட மட்ட உத்தியோகத்தர்களுக்கான தமிழ் பயிற்சி பாடத்திட்டம்	28	100 மணி நேரம்	75.00		உள்ளூர்	தமிழ்

* நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை சுருக்கமாக விளக்குக.

1. பல்வேறு துறைகளின் புதுப்பித்த அறிவின் மூலம் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.
2. பயிற்சி திட்டங்கள் மூலம் அணுகுமுறைகள் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் கூட்டு பொறுப்பு ஆகியவற்றை மேம்படுத்துதல்.
3. ஊழியர்களின் சேவைத் தேவைகளை அடையாளம் காணுவதன் CL அவர்களின் உற்பத்தி நிலையை அடைய உதவுதல்.
4. புதுமையான மற்றும் திறமையான அலுவலக அமைப்புகள் மூலம் பணியாளர்களை ஊக்குவித்தல்.

அத்தியாயம் 07

இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
1	**பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.2	அரச முற்பணக் கணக்குகள்	இணக்கமானது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்)	ஏற்புடையதல்ல		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	ஏற்புடையதல்ல		
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு	ஏற்புடையதல்ல		
1.6	ஏனைய	ஏற்புடையதல்ல		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணுதல் (நி.பி. 445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்துப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்தக் கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேறிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளைப் பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.7	பொருட் பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.8	இருப்புப் பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.9	இழப்புப் பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.10	பொறுப்பு பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
2.11	அடிக்கட்டைப் புத்தகங்களின் (GA - N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும்	இணக்கமானது		
3	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி.135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது	இணக்கமானது		
3.4	2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை	இணக்கமானது		
4	**வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேறி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
5	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது	இணக்கமற்றது	ஒவ்வொரு பிரிவிலும் தகவல்களை பெற்றுக்கொள்ள காலம் தேவைப்படுகிறது	நிவர்த்தி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.பி.134(2) DMA/1-2019 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்	இணக்கமற்றது	ஒவ்வொரு பிரதேச அலுவலகம் ஊடாகவும் தகவல்களைச் சேகரிக்க நீண்ட காலம் செல்கிறது.	சரிசெய்ய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதிப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குதல்	இணக்கமானது		
7	**கணக்காய்வு முகாமைத்துவக் குழு**			
7.1	டிஎம்ஏ 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.	இணக்கமானது		
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	01/2017 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்திற்கு ஏற்ப, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.	இணக்கமானது		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின் படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்	இணக்கமானது		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல. 05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன	இணக்கமற்றது	நாட்டின் மோசமான பொருளாதார சூழ்நிலையில் அதைச் செய்ய முடியவில்லை	சரக்கு கணக்கெடுப்பு 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு, 2023 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட தேதியில் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது 2023 ஆம் ஆண்டில் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
8.5	நி.பி. 772 இன் படி, கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது	இணக்கமற்றது	2022ஆம் ஆண்டு 06 வாகனங்கள் அழிக்கப்பட்டதுடன் எஞ்சிய 02 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 03 இயந்திரங்கள் எஞ்சியிருந்தன.	2023ம் ஆண்டு அப்புறப்படுத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்	இணக்கமற்றது	2022 ஆம் ஆண்டு 06 வாகனங்கள் விற்கப்பட்டுள்ளதுடன், 03 இயந்திரங்களும் 02 மோட்டார் சைக்கிள்களும் விற்பனை செய்யப்பட உள்ளன.	அகற்றல் செயற்பாடு இடம்பெறுகிறது
9.3	வாகன பதிவுப் புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி. 103, 104, 109 மற்றும் 110 இன் படி, நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.5	2016.12.29 திகதிய, பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்	இணக்கமற்றது	எரிபொருள் நெருக்கடி காரணமாக செய்ய முடியவில்லை	இது 2023 ஆம் ஆண்டில் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது
9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவுப் புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும்	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
10	**வங்கிக் கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட அல்லது அதற்கு முன்னைய வருடங்களிலிருந்து முன்கொண்டு வந்த செயற்படாத வங்கிக் கணக்குகளைத் தீர்த்தல்	இணக்கமானது		
10.3	வங்கிக் கணக்கிணக்க அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சரிசெய்யப்பட வேண்டியிருந்த நிலுவைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின்படி செயற்பட்டு ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளைத் தீர்த்தல்	இணக்கமானது		
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்	இணக்கமானது		
11.2	நி.பி. 94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்	இணக்கமானது		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணக்கமானது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்	இணக்கமானது		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி. 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்	இணக்கமானது		
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
14	**முன்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேறி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
14.2	நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்	இணக்கமற்றது	தாமதமாகிவிட்டது	சரிசெய்ய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது
14.3	நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்	இணக்கமானது		
14.4	மாதந்தோறும் திறைசேறி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
15	**வருமானக் கணக்கு**			
15.1	விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்	ஏற்புடையது அல்ல		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்	ஏற்புடையது அல்ல		
15.3	நி.பி. 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	ஏற்புடையது அல்ல		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்	இணக்கமானது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்	இணக்கமானது		
16.3	20.09.2017 தேதியிட் எம்எஸ்டீ சுற்றறிக்கை இல. 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவத் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணக்கமானது		
17	**பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரியொருவரை நியமித்து தகவல் வழங்கும் பதிவொன்றைப் புதுப்பித்துப் பராமரித்தல்	இணக்கமானது		
17.2	நிறுவனம் பற்றிய தகவல்களை அதன் வலைதளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொதுக் கருத்துக்கள்/ குற்றச்சாட்டுக்களை எளிதாக்குதல்	இணக்கமானது		

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒருமுறை அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
18	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2008 மற்றும் 05/2008 (1) இன் படி பிரசைகள் பட்டயம்/ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்தல்	இணக்கமானது		
18.2	சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொறுத்தவரை,பிரசைகள் பட்டயம்/ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல், செயற்படுத்தல் பணிகளைக் கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது	இணக்கமானது		
19	**மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வளத் திட்டம் உறுதி செய்ய வேண்டும்	இணக்கமானது		
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது	இணக்கமானது		
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 ஆவது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்	இணக்கமானது		
20	**கணக்காய்வுப் பந்திகளுக்கான பொறுப்புக்கள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வுப் பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்	இணக்கமானது		